**அரக்கோணம் நகராட்சி**

**சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு**

**கூட்ட எண்.47** **நாள்.31.10.2019.**

**பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 31.10.2019 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.**

**அரக்கோணம் நகராட்சி 31.10.2019 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர்/2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :02**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர்–9. அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.அ2/1087/2019 நாள். 30.09.19ல் செயல்முறை கடிதத்தின்படி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–20ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த அரக்கோணம் நகராட்சி, வார்டு எண்.03 பிள்ளையார் கோயில் தெரு முதல் கணேஷ் நகர் மெயின் ரோடு வரை தார்சாலை அமைக்க மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்தில் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1029/2019/இ1)**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25–ல் அமைந்துள்ள நுன் உர செயலாக்க மையம் (Micro Comosting Center ) -க்கு Dry Comosting Platform அமைக்க வேண்டியுள்ளது. மேலும் வார்டு எண்.22, ரத்தன் சந்த் நகர் பகுதியில் அமைந்துள்ள நுன் உர செயலாக்க மையம் (Micro Comosting Center) சுற்றுச்சுவர் அமைக்க மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி திட்டப்பணி என்பதால் பணிகளை உடனடியாக முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. ஏனவே மேற்படி பணிகளை உடனடியாக முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயனபாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. மேற்படி திட்டப்பணி என்பதால் பயனீட்டு சான்று மற்றும் பணி முடிவு அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் பணியினை நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.A.அண்ணாதுரை அவர்கள் மூலம் பணியை செய்து முடிக்க மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :04**

இந்நகராட்சியில் பொது நிதி 2019–2020ன் கீழ் 18.10.2019ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப் பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| **1.** | டவுன்ஹால் 1–வது தெரு, வள்ளலார் தெரு பஜார் தெரு ( மார்கெட் பகுதி) மற்றும் அருணாச்சலம் 1–வது தெருவில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | **9.90** | திரு.கே.வாசு | 0.0028% | திரு. ஜி.தாமோதரன் | 0.19% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | இரட்டை மலை சீனிவாசன் தெரு, மீனம்பாள் சிவராஜ் தேரு, அத்திப்பட்டான் தேரு மற்றும் ஜாபர் மஸ்தான் தர்கா தெருவில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.50 | திரு.எஸ்.பாஸ்கரன் | 0.03% | திரு. எஸ்.ரமேஸ்பாபு | 0.067 % |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2018

**பொருள் எண் :05**

இந்நகராட்சியில் பொது நிதி 2019–2020ன் கீழ் 18.10.2019ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீ டு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | மணியக்கார தெரு, மசூதி தெரு (இரயில் நிலையம் தெரு), மசூதி சந்து தெரு, ஏ பி எம் சர்ச் மெயின் ரோடு, குறிஞ்சு நகர் 2–வது தெரு, மற்றும் குறிஞ்சு நகர் 1–வது தெருவில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.90 | திரு.கே.வாசு | 0.04% | திரு. ஜி.தாமோதரன் | 0.188 % |
| 2 | மேட்டு தெரு, ஒத்தவாடை தெரு, கன்னியப்பன் நகர், மற்றும் சாணத்தியம்மன் கோயில் தெருவில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.90 | திரு.வி.சதிஸ்குமார் | 0.03% | திரு. கே.பசுபதி | 0.070 % |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2018

**பொருள் எண் :06**

இந்நகராட்சியில் பொது நிதி 2019–2020ன் கீழ் 18.10.2019ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகித ம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | சுந்தரம் தெரு, சரோஜினி தெரு, சோமசுந்தரம் 2–வது தெரு, சோமசுந்தரம் 3–வது தெரு, வெள்ளைக்குளம் 1–வது தெரு மற்றும் சுப்பராயன் தெருவில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.90 | திரு. கே.பசுபதி | 0.02% | திரு. வி.சதிஷ்குமார் | 0.070 % |
| 2 | என்.வி.என் தெரு, வி பி கோயில் லைன் தெரு, டி என்.நகர் 3–வது தெரு மற்றும் செய்யூர் பாட்டை தெருவில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.50 | திரு.எஸ்.பாஸ் கரன் | 0.03% | திரு. எஸ்.ரமேஸ்பாபு | 0.067 % |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2018

**பொருள் எண் :07**

இந்நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020ன் கீழ் 24.10.2019ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீ டு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகித ம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | அரக்கோணம் நகராட்சி, வார்டு எண்.03 பிள்ளையார் கோயில் தெரு முதல் கணேஷ் நகர் மெயின் ரோடு வரை தார்சாலை அமைத்தல். | 7.00 | திரு.என்.பாபு | 0.01% | திரு.பி.வீரராகவ ன் | 3.63% |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1க்கான பணிக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .1029/இ1/2018

**பொருள் எண் :08**

வார்டு எண்.19 புதிய பேருந்து நிலையம் முதல் அன்னை இந்திரா தெரு வரை மதிப்பீடு ரூ.**33.00** இலட்சத்தில் தார் சாலை அமைத்தல் பணிக்கு **24.10.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பின்வரும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றதை தொடர்ந்து **30.10.2019** அன்று விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் பின்வரும் விலை விகிதத்தில் வரப்பெற்றுள்ளன.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| **1.** | வார்டு எண்.19 புதிய பேருந்து நிலையம் முதல் அன்னை இந்திரா தெரு வரை புதியதாக தார் சாலை அமைத்தல் | **33.00** | திரு.எஸ்.பாஸ்கரன் | 0.14% | திரு.ஜி.தமோதரன் | 1.86% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1க்கான பணிக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .1081/இ1/2019**

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சியில் கீழ்குறிப்பிட்ட பகுதிகளில் சாலை அமைத்தல், மழைநீர் கால்வாய் மற்றும் குடிநிர் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது, மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.3 கணேஷ் நகர் 1 –வது குறுக்கு தெரு மற்றும் 2–வது குறுக்கு தெருவில் தார் சாலை அமைத்தல். | **9.80** |
| 2. | வார்டு எண்.06 டவுன் ஹால் 6–வது தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல். | **3.00** |
| 3. | வார்டு எண்.06 நேரூஜி நகர் 3 மற்றும் 8–வது தெருவில் உள்ள சிமெண்ட் சாலை பழுது பார்த்தல் மற்றும் 1 Hp நீர் முழ்கி மோட்டார் மற்றும் கேபிள்கள் விநியோகம் செய்தல் | **3.50** |
| 4 | வார்டு எண்.14 வெள்ளைக்குளம் 7–வது தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | **3.00** |

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண் :10**

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் (Tufidco Loan) அரக்கோணம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாளச் சாக்கடை திட்டத்திற்கான குடியிருப்புகளுக்கான வீட்டு இணைப்புகள் வழங்குவற்கு மதிப்பீடு ரூ.**375.00** இலட்சத்தில் சிப்பம் –III- வார்டு எண்.**01** முதல் **36** வரையில் உள்ள விடுப்பட்ட **5600** குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் பணிக்கு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்படததால் நான்காவது முறையாக **11.10.2019** அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பின்வருமாறு வரப்பெற்றுள்ளது. மேற்படி பணி திட்டப்பணி என்பதாலும் நான்கு முறை மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூராய்வு செய்யப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றதை தொடர்ந்து **18.10.2019** அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| t. v© | gâæ‹ bga® | kÂ¥ÕL y£r¤Â š | kÂ¥Õ£ilél Fiwªj rjé»j x¥gªj¥òÝë étu« | | kÂ¥Õ£ilél mÂf rjé»j x¥gªj¥òÝë étu« | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| 1 | 2 | | x¥gªjj hu® bga® | rj é»j« | bga® | mÂf rj é»j« |
| **1.** | சிப்பம் –III வார்டு எண்.**01** முதல் **36** வரையில் உள்ள விடுப்பட்ட **5600** குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல். | **375.00** | –– | | M/S. சண்முகவேல் கன்ஸ்டரக்ஸன் | **6.30%** |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரர் M/S. சண்முகவேல் கன்ஸ்டரக்ஸன் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து குறைத்து தரக்கோரி கடந்த **18.10.2019** அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு. M/S. சண்முகவேல் கன்ஸ்டரக்ஸன் அவர்களின் **21.10.2019**ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| பணி | ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| சிப்பம்–3 | M/S. சண்முகவேல் கன்ஸ்டரக்ஸன் | 6.30% | (–) 1.45% | 4.85% |

மேற்படி ஒப்பந்ததாரின் ஒத்திசைவு கடிதத்தின் படி **–1.45%** (சிப்பம்–3 M/S. சண்முகவேல் கன்ஸ்டரக்ஸன் **4.85%** மதிப்பட்டை விட அதிகம் ) குறைத்து கொடுத்துள்ளனர், ஒப்பந்தபுள்ளிகளை ஏற்று, திட்டப் பணிகள் என்பதால் காலதாமதத்தையும், பணிக்கு தேவையான மெட்டீரியல்ஸ் விலை உயர்வினையும் கருத்தில் கொண்டு, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண்.2535/2006/இ1**

**பொருள் எண்:11**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் TATA ACE மினி லோடு வேன் (LCV) எண். TN73R 2325 தகுதிச்சான்று பெற செய்ய வேண்டியுள்ளதால் குப்பை லாரியை பழுது நீக்கம் செய்ய **18.10.2019** அன்று மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி (GST 18 ரூ உட்பட ) | வேலு மோட்டார் ஒர்க்ஸ் சென்னை—42 (ழுளுகூ 18 ரூ |
|---|---|---|---|
| 1 | **TATA ACE** மினி லோடு வேன்எண். **TN73R 2325 (LCV)** | 58,848/— | 59,569/— |

மேற்காணும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருத்தணி**, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.1410/எச்1/2019)**

**பொருள் எண்:12**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் TATA ACE மினி லோடு வேன் (LCV) எண். TN73R 2355 தகுதிச்சான்று பெற செய்ய வேண்டியுள்ளதால் குப்பை லாரியை பழுது நீக்கம் செய்ய **18.10.2019** அன்று மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி | வேலு மோட்டார் ஒர்க்ஸ் சென்னை—42 |
|---|---|---|---|
| 1 | **TATA ACE** மினி லோடு வேன்எண். **TN73R 2355 (LCV)** | 59,050/— | 60,319/— |

மேற்காணும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருத்தணி**, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.1411/எச்1/2019)**

**பொருள் எண்:13**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் TATA ACE மினி லோடு வேன் (LCV) எண். TN73R 2353 தகுதிச்சான்று பெற செய்ய வேண்டியுள்ளதால் குப்பை லாரியை பழுது நீக்கம் செய்ய **18.10.2019** அன்று மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விவரம்** | **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி** | **வேலு மோட்டார் ஒர்க்ஸ் சென்னை–42** |
|---|---|---|---|
| 1 | **TATA ACE**<br>**மினி லோடு வேன்எண்.**<br>**கூசூ73சு 2353 (LCV)** | 59,277/– | 60,357/– |

மேற்காணும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருத்தணி**, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.1412/எச்1/2019)**

**பொருள் எண்:14**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் டம்பர் பிளோசர் லாரி எண். TN73W 2299 தகுதிச்சான்று பெற செய்ய வேண்டியுள்ளதால் குப்பை லாரியை பழுது நீக்கம் செய்ய **18.10.2019** அன்று மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விவரம்** | **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி** | **வேலு மோட்டார் ஒர்க்ஸ் சென்னை–42** |
|---|---|---|---|
| 1 | டம்பர் பிளோசர் லாரி எண். TN73W 2299 | 2,49,216/– | 2,52,436/– |

மேற்காணும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருத்தணி**, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1413/எச்1/2019)

**பொருள் எண்:15**

அரக்கோணம் இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்கள் 01.09.2019 முதல் 30.11.2019 வரை பயன்படுத்தி கொள்ளவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.27.00 லட்சத்திற்கும் ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது 21.10.2019 தேதிய டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பற்றிய மாவட்ட வாரந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்கள் அரக்கோணம் நகராட்சியில் 64 நபர்களுக்கு டெங்கு காய்ச்சல் நோய் தொற்று ஏற்பட்டுள்ளதால் 85 DBC பணியாளர்களை வைத்து கொண்டு டெங்கு காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டிற்குள் வைத்திட இயலாது எனவும் பொதுமக்களின் நலன் கருதி மேலும் கூடுதலாக 35 DBC பணியாளர்களை பணி அமர்த்தி கொண்டு டெங்கு காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டிற்குள் வைத்திடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே 22.10.2019 முதல் 30.11.2019 வரை கூடுதலாக 35 DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே இந்நகராட்சியில் பணி செய்து வந்த 1) இன்பம் மகளிர் சுய உதவிக்குழு 2) ஏஞ்சல் மகளிர் சுய உதவிக்குழு 3) இளந்தென்றல் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய மூன்று மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் கூடுதலாக 35 பணியாளர்களை பெற்று பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1245/எச்1/2019)**

**பொருள் எண்:16**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் தற்போது டெங்குகாய்ச்சல் நோயினால் 51 நபர்கள் பாதிப்படைந்துள்ளனர். எனவே நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கூட்டு துப்புரவு பணியினை மேற்கொண்டு நகரை தூய்மையாக வைத்திடவும், தொற்று நோய் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், கிருமி நீக்கம் செய்யும் பணிக்கு தேவைப்படும் **நீர்த்த சுண்ணாம்பு தூள்** 2019–2020 ஆம் ஆண்டிற்கு 6000 கிலோ கொள்முதல் செய்து கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **கிருமி நாசனியின் பெயர்** | **2019–2020 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் அளவு** | **Tamilnadu Small Industries Development Corporation Ltd Thirumazhisai** | **Lalitha Agencies No.160,Old Township Road, Ambattur-53** | **Sri sai kiran traders, No.63, Kamaraj Street Anverthikanpet 632502** |
|---|---|---|---|---|---|
| 1 | **நீர்த்த சுண்ணாம்பு தூள்** | 6000 கிலோ | ரூ.12.50/– ஒரு கிலோ | ரூ.17.50/– ஒரு கிலோ | ரூ.22.50/– ஒரு கிலோ |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள **Tamilnadu Small Industries Development Corporation Ltd, Thirumazhisai** நிறுவனத்தின் மூலம் **நீர்த்த சுண்ணாம்பு தூள் – 6000 கிலோ** கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.0.75 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 493/எச்1/2019)**

**பொருள் எண்:17**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் தற்போது டெங்குகாய்ச்சல் நோயினால் 51 நபர்கள் பாதிப்படைந்துள்ளனர். எனவே நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கூட்டு துப்புரவு பணியினை மேற்கொண்டு நகரை தூய்மையாக வைத்திடவும், தொற்று நோய் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், கிருமி நீக்கம் செய்யும் பணிக்கு தேவைப்படும் **பிளிச்சிங் பவுடர் – 6000 கிலோ** 2019–2020 ஆம் ஆண்டிற்கு 6000 கிலோ கொள்முதல் செய்து கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண் | கிருமி நாசனியின் பெயர் | 2019–2020 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் அளவு | Tamilnadu Small Industries Development Corporation Ltd<br>Thirumazhisai | Lalitha Agencies<br>No.160,Old Township Road,<br>Ambattur-53 | Sri sai kiran traders,<br>No.63, Kamaraj Street<br>Anverthikanpet 632502 |
|---|---|---|---|---|---|
| 1 | பிளிச்சிங் பவுடர் | 6000 கிலோ | ரூ.30/–<br>ஒரு கிலோ | ரூ.38/–<br>ஒரு கிலோ | ரூ.44.50/–<br>ஒரு கிலோ |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள **Tamilnadu Small Industries Development Corporation Ltd, Thirumazhisai** நிறுவனத்தின் மூலம் **பிளிச்சிங் பவுடர் – 6000 கிலோ** கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.1.80 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 492/எச்1/2019)**

**பொருள் எண்:18**

தமிழ்நாடு சுகாதார இணை இயக்குநர், சென்னை மற்றும் துணை இணை இயக்குநர், வேலூர் மாவட்டம், அவர்களால் அரக்கோணம் C.S.I.சென்ட்ரல் பெண்கள் மேநிலைப்பள்ளியில் நடத்தப்பட்ட டெங்குகாய்ச்சல் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்குகாய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் காய்ச்சல் கட்டுபடுத்துவதற்கான மருத்துவ முகாம் 08.10.2019 முதல் 15 நாட்களுக்கு 225 மருத்துவ முகாம் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மருத்துவ முகாம் நடைபெறும் இடத்திற்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்த கீழ்காணும் இனங்களுக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **அடிப்படை வசதி ஏற்படுத்த தேவைப்படும் பொருட்களின் விவரம்** | **(விலைப்புள்ளி) வாடகை ஒன்றின் விலை ரூ** | **(விலைப்புள்ளி) வாடகை ஒன்றின் விலை ரூ** |
|---|---|---|---|
| 1 | சாமினா | ஸ்ரீ ரமா சப்ளையர்ஸ் அரக்கோணம்<br>ரூ. 600/– | ஸ்ரீ வெங்கடேசஸ்வரா சப்ளைர்ஸ் அரக்கோணம்<br>ரூ. 625/– |

| | | | |
|---|---|---|---|
| 2 | டேபில், | ஸ்ரீ ரமா சப்ளையர்ஸ் அரக்கோணம் ரூ. 30/– | ஸ்ரீ வெங்கடேசஸ்வரா சப்ளைர்ஸ் அரக்கோணம் ரூ.35/– |
| 3 | நாற்காலி (சேர்) | ஸ்ரீ ரமா சப்ளையர்ஸ் அரக்கோணம் ரூ.5/– | ஸ்ரீ வெங்கடேசஸ்வரா சப்ளைர்ஸ் அரக்கோணம் ரூ.6/– |
| 4 | வாடகை ஆட்டோ ( நாள் ஒன்றுக்கு) | திரு.உமாபதி அரக்கோணம் ரூ. 1250/– | திரு.வினோத் அரக்கோணம் ரூ. 1400/– |
| 5 | ஆட்டோவில் ஒரு மைக்செட் மற்றும் ஆம்பிலிபயர் அமைத்தல் ( நாள் ஒன்றுக்கு) | ஏ.சு.ளு சவுண்டு சர்வீஸ் அரக்கோணம் ரூ. 700/– | குமார் சவுண்டு சர்வீஸ் அரக்கோணம் ரூ. 750/– |
| 6 | பார்சல் உணவு ஒன்றின் விலை ரூ. | ஸ்ரீ குமரன் கேட்டரிங் சர்வீஸ் அரக்கோணம் ரூ. 50/– | ஒட்டல் ஸ்ரீ சரவணா லட்ச் ஓம் அரக்கோணம் ரூ. 60/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளவர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், மற்றும் தோராய செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுமக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண் 1460/எச்1/2019)**

**பொருள் எண்:19**

இந்நகராட்சி பகுதியில் 08.10.2019 முதல் 15 நாட்களுக்கு 225 மருத்துவ முகாம் நடத்திட பொதுமக்களின் தகவலுக்கும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் பின்வரும் விவரப்படி பேனர்கள் “4X3” அளவில் 74 எண்ணிக்கை, “8X4” அளவில் 2 எண்ணிக்கை, மற்றும் தூய்மை தூதுவர் அடையாள அட்டை 4000 எண்ணிக்கை தயார் செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பேனர் அளவுகள்** | **எண்ணிக்கை** | **தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம் தொகைரூ GST 18 ரூ உட்பட** | **இயைள டிஜிட்டல் காஞ்சிபுரம் தொகைரூ GST 18 ரூ உட்பட** | **மு.மு.டிஜிட்டல் அரக்கோணம் தொகைரூ GST 18 ரூ உட்பட** |
|---|---|---|---|---|---|
| 1 | “4X3” | 74 | ரூ.24,958/– | ரூ.25,948/– | ரூ.26,444/– |
| 2 | “8X4” | 2 | | | |
| 3 | தூய்மை தூதுவர் அடையாள அட்டை | 4000 | ரூ.16,520/– | ரூ.17,700/– | ரூ.17,936/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம்**, அவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவின தொகை ரூ.41,478/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1461/எச்1/2019)**

**பொருள் எண்:20**

இந்நகராட்சியில் 2019–2020 ஆம் நிதி ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள். கணினி பயன்பாட்டிற்கு தேவையான டோனர்கள் எழுது பொருட்கள், ஆகியவற்றை Napco கூட்டுறவு நிறுவனத்தில் வாங்க தோராய செலவினம் தொகை ரூ.5 லட்சத்திற்கு மன்ற தீர்மான எண்.514 நாள்.28.02.2019–ன்படி அனுமதி பெறப்பட்டது இந்நிதியாண்டில் எழுது பொருட்கள் பெறப்பட்ட வகையில் இதுவரை ரூ,4,78,766/– செலவிடப்பட்டுள்ளது. மேலும் இந்நிதியாண்டு முடிய ஐந்து மாதங்கள் உள்ள நிலையில் தற்போது எழுது பொருட்கள் மேற்கொண்டு தேவைப்படுவதால் கூடுதலாக 3 லட்சத்திற்கு எழுது பொருட்கள் Napco கூட்டுறவு வேலூர் அச்சகத்தில் வாங்கிக் கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- பொது நிதியிலிருந்து எழுது பொருட்கள் Napco கூட்டுறவு அச்சகத்தில் வாங்கிக் கொள்ளவும் ரூ.3 லட்சம் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.804/பி2/2013)**

**பொருள் எண்:21**

அரக்கோணம் நகரா*./9ட்சிக்குட்பட்ட வார்டு எண்.33–ல் அமைந்துள்ள நுன் உர செயலாக்க மையம் (Micro Comosting Center ) -க்கு Dry Comosting Platform அமைக்க வேண்டியுள்ளது. மேலும் (Micro Comosting Center) சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி திட்டப்பணி என்பதால் பணிகளை உடனடியாக முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. பயனீட்டு சான்று மற்றும் பணி முடிவு அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் பணியினை நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.A.அண்ணாதுரை அவர்கள் மூலம் பணியை செய்து முடிக்க மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.887/2018/இ1)**

**பொருள் எண்:22**

அரக்கோணம் உள்ளூர்த்திட்டக்குழுமம் பகுதியில் அரக்கோணம் நகர வார்டு எண் டி, பிளாக் எண் 19, நகரளவு எண். 5/2–ல் கிருஷ்ணாம்பேட்டை பயணியர் விடுதி சாலையில் 3.34 ஏக்கர் பரப்பளவிலான இடம் அங்கிகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தின்படி கலப்பு குடியிருப்பு பகுதியாக நிலப்பாகுபாடு செய்யப்பட்டுள்ளதை மாற்றி கல்வி உபயோக பயன்பாட்டு பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்துதரக்கோரி திரு.எ.சாமுவேல் கொர்லின்ஸ், சர்ச் ஆப் சௌத்இந்தியா, சென்னை பேராயம் அவர்கள் கெடுத்துள்ள விண்ணப்பம் நகர் ஊரமைப்புதுறையின் ஒப்புதலுக்கு

அனுப்புவதற்கும் மேற்படி நிலப்பயன்மாற்றத்திற்கான மற்ற ஒப்புதல் வழங்க பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** மனுதாரர் நிலப்பயன் மாற்றம் கோருமிடம் அங்கீகாரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தின்படி கலப்பு குடியிருப்பு பகுதியாக நில உபயோக வகைபாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு வடக்கு பக்கம் நெடுச்சாலைத்துறைக்கு சொந்தமான புழக்கத்தில் உள்ள பயனியர் விடுதி சாலையும் தெற்கு பக்கம் நகரளவு எண் 4 மற்றும் 6/14 மேற்கு பக்கம் புழக்கத்தில் உள்ள சாலை , கிழக்கு பக்கம் T.S.No.5/1 உள்ளது. மேற்படி இடத்தின் நகரளைவை ஆவனங்களில் உட்பிரிவு மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பெற்றும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த இடம் குறித்து வட்டாட்சியர் அரக்கோணம் அவர்களிடமிருந்து மு.மு.ஆ1/1833/2019 நாள். 03.06.19–ல் தடையில்லாச் சான்று பெறப்பட்டுள்ளது. மனுதாரரின் கோரிக்கை சம்மந்தமாக பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் எழுத்து பூர்வமாக வழங்க கோரி தினகரன் நாளிதழில் 05.09.19ம் தேதியன்று தமிழிலும் டெக்கான் கிரானிகல் என்ற ஆங்கில நாளிதழில் 05.09.19ம் தேதியன்று ஆங்கிலத்திலும் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதனையடுத்து இதுகானும் இப்பொருள் சம்பந்தமாக யாதொரு ஆலேசனை மற்றும் ஆட்சேபனையும் பொதுமக்களிடமிருந்தோ வேறுவெரிடமிருந்தோ வரப்பெறவில்லை. மேற்படி இடத்தில் சி.எஸ்.ஐ கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடம் கட்ட உத்தேசித்திருப்பதால் கலப்பு குடியிருப்பு பகுதினை கல்வி உபயோக பயன்பாட்டு நிலப்பகுதியாக மாற்றம் செய்துதர மனுதாரர் கோரிக்கையினை நகர் ஊரமைப்புதுறை பரிசீலித்து அனுமதிக்க ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண்(1134/19/எப்1)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**